# மெட்ரோவில் ரூ.100 பாஸ்



சென்னை, பிப். 17–

ஒரு நாள் முழுவதும் மெட்ரோ ரயிலில் பயணம் செய்ய, 100 ரூபாய்க்கு, 'சுற்றுலா கார்டு' திட்டம் அறிமுகம் செய்யப் பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் போக்குவரத் தில், பயணியரின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகை யில், 100 ரூபாய்க்கு, ஒரு நாள் பாஸ் அறிமுகம் செய்யப் பட்டுள்ளது.

இதன் மூலம், காலை, 6:00 மணி முதல் இரவு, 10:00 மணி வரை, மெட்ரோ ரயிலில், எத்தனை முறை வேண்டு மானாலும் பயணம் செய்யலாம்.

ரயில் நிலைய டிக் கெட் கவுன்டரில், 150 ரூபாய் கொடுத்து, இந்த கார்டை பெற லாம். பயணம் முடிந்த பிறகு, கார்டை ஒப்படைத்து, 50 ரூபாய் டிபாசிட் கட்டணத்தை திரும்ப பெறலாம்.

இந்த கார்டு வாங்கிய நாளில் இருந்து, 30 நாட் களுக்குள் பயன் படுத்த வேண்டும்.